இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 07.05.2026

# தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம்!

தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மூன்று முக்கியமான மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் பிரதமர் மோடிக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும். முதலமைச்சர் பதவியில் இருந்து மூன்று எதிரிகள் இறங்கி விட்டதாக அவர் மகிழ்ந்திருப்பார்.

**தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சித் தகுதியைப் பெறாமல் போயிருக்கலாம். அதற்காக பிரதமர் மோடியின் கட்சி ஆட்சிக்கு வந்துவிடவில்லை. 27 இடங்களில் போட்டியிட்டு ஒரு தொகுதியில்தான் மோடியின் பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது. பழனிசாமி மூலமாக ஆட்சியைப் பிடிக்க நினைத்த பா.ஜ.க. படுகுழிக்குத் தள்ளப்பட்டுள்ளது. எனவே இதில் மோடி மகிழ்ச்சி அடைய என்ன இருக்கிறது?**

கேரளாவில் தேர்தல் களத்தில் பா.ஜ.க.வே இல்லை. அங்கே மோதலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் தான். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வசம் இருந்த ஆட்சி, காங்கிரஸ் வசம் வந்துள்ளது. 140 உறுப்பினர்களைக் கொண்ட கேரள சட்டசபையில் 102 தொகுதிகளை காங்கிரஸ் கூட்டணி கைப்பற்றி இருக்கிறது. 35 இடங்களை இடதுசாரி அணி பிடித்துள்ளது. பா.ஜ.க. எத்தனை இடங்களில் வெற்றி பெற்றுள்ளது தெரியுமா? மொத்தமே 3 தான். அதாவது 140 தொகுதிகளில் வெறும் 3 இடங்களைப் பிடித்துள்ளது பா.ஜ.க. எனவே இதில் மோடி மகிழ்ச்சி அடைய என்ன இருக்கிறது?

மேற்கு வங்கத்தில் மூன்று முறையாக வென்று முதலமைச்சராக இருந்தார் மம்தா. 15 ஆண்டுகளாக தொடர்ந்து முதலமைச்சராக இருந்தார். அந்த அதிருப்தியை பா.ஜ.க. பயன்படுத்திக்கொண்டது. பா.ஜ.க.வின் எதிரிகளான காங்கிரஸ், இடதுசாரிகள், திரிணாமுல் ஆகியவை தனித்தனியாகப் போட்டியிட்டதும் பா.ஜ.க.வின் வெற்றிக்கு ஒரு காரணம் ஆகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக உள்துறை அமைச்சர் அமித்ஷா, மேற்கு வங்கத்தையே குறிவைத்தபடி இருந்தார். பெண் வாக்காளர்களுக்கு மாதம் ரூ.3 ஆயிரம், பேருந்துகளில் இலவசப் பயணம் ஆகிய வாக்குறுதிகளால் பா.ஜ.க. மக்களை ஈர்த்தது. இது ஆட்சி மாற்றத்துக்கு மிக முக்கிய காரணம் ஆகும். திரிணாமுல் காங்கிரஸ் 40.81 விழுக்காடு வாக்குகளைப் பெற்றுள்ளது. பா.ஜ.க., 45.46 விழுக்காடு வாக்குகளைப் பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளது. திரிணாமுல் வாக்குகள் முழுமையாக வீழ்ந்துவிடவில்லை. இருப்பினும் மேற்கு வங்கத்தை நினைத்து மட்டுமே பிரதமர் மோடி மகிழலாம்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள், மேற்கு வங்க மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்கள் - ஆகிய மூவருக்கும் முடிந்த அளவு குடைச்சல் கொடுத்து வந்தார் பிரதமர் மோடி. பா.ஜ.க. ஆளாத மாநிலங்கள் என்பதை விட, அதிகாரம் பொருந்திய ஆளுமைகள் இவர்கள் என்பதும் மோடி கொடுத்த குடைச்சலுக்கு அடிப்படைக் காரணம் ஆகும்.

**பிரதமர் ஆவதற்கு முன்னால் குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர் தான் நரேந்திர மோடி அவர்கள். அவர் குஜராத் முதலமைச்சராக இருந்தபோது, மாநில உரிமைகளுக்காக கடுமையாகக் குரல் கொடுத்தவர். ‘டெல்லியில் இருந்து ஆள்வதா?’ என்று கேட்டவர் தான். பிரதமர் ஆனதும் அளித்த பேட்டியில், ‘நான் அப்படி இருக்க மாட்டேன். எந்த மாநிலத்தையும் பழிவாங்க மாட்டேன். மாநிலங்களை மதித்துச் செயல்படுவேன்’ என்று சொன்னவர் தான் மோடி அவர்கள். ஆனால் இதற்கு முற்றிலும் விரோதமாகத் தான் கடந்த 12 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறார். மாநிலங்களுக்கு எதிராக அவர் நடத்தி வரும் வேட்டையால் அதிகம் பாதிக்கப்பட்ட மாநிலங்கள் தான் தமிழ்நாடும், கேரளாவும், மேற்கு வங்கமும்.**

தமிழ்நாட்டை மொத்தமாகப் பழிவாங்கினார்கள். ஒரே ஒரு எய்ம்ஸ் மருத்துவமனையை அறிவித்துவிட்டு, 10 ஆண்டுகளாகக் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். மதுரைக்கு மெட்ரோ ரயில், திருச்சிக்கு மெட்ரோ ரயில்,கோவைக்கு மெட்ரோ ரயில் கேட்டோம். தரவில்லை. ஓசூர் விமானநிலையத்துக்கு அனுமதி தரவில்லை. சென்னை மெட்ரோ திட்டத்துக்காக ஒன்றிய அரசு தர வேண்டிய நிதியை முழுமையாகத் தராமல் இழுத்தடிக்கிறார்கள். பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களை மறுக்கிறார்கள். ஒன்றிய அரசு தர வேண்டிய திட்டங்களுக்கான நிதியைக் கூட நிறுத்தி வைக்கிறார்கள். ஒன்றிய அரசின் சரக்கு மற்றும் சேவை வரி என்ற பெயரால் வசூலிக்கப்படும் அநியாய வரி காரணமாக தமிழ்நாட்டுக்கு இந்த ஆண்டு மட்டும் 9 ஆயிரத்து 600 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இப்படி செயற்கையான ஒரு நிதி நெருக்கடியை உருவாக்கியது ஒன்றிய பா.ஜ.க.

இதே நிலைமை தான் கேரளாவுக்கும், மேற்கு வங்கத்துக்கும். இதே நிலைமைகள் தான் பா.ஜ.க. ஆளாத மாநிலங்களுக்கும்.

**மாநில முதலமைச்சர்கள், டெல்லிக்குப் போய் போராட்டம் நடத்திய காட்சிகள் எல்லாம் மோடி ஆட்சிக் காலத்தில் தான் நடந்தன. டெல்லிக்குப் போய் சாலையில் நின்று போராட்டம் நடத்தினார் கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன். கர்நாடக முதலமைச்சர் சித்தராமையாவும் போராட்டம் நடத்தினார். இதெல்லாம் இந்திய நாட்டின் பிரதமருக்குத் தான் அவமானம்.**

**ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசாங்கத்தின் எதேச்சதிகார தன்மையால் அதிகம் பாதிக்கப்பட்ட முதலமைச்சர்கள், இனி முதலமைச்சர் நாற்காலியில் இல்லை என்று பிரதமர் மோடி மகிழலாம். ஆனால் இவர்கள் அரசியல் களத்தில் பலம் பொருந்திய தலைவர்கள். அந்தந்த மாநில எல்லைகளைக் கடந்த தலைவர்கள். இந்திய நாடாளுமன்றத்தில் பலம் பொருந்திய உறுப்பினர்களை திராவிட முன்னேற்றக் கழகமும், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியும் வைத்துள்ளது. இந்த உறுப்பினர்கள், பிரதமர் மோடிக்கு தமிழ்நாட்டையும், கேரளத்தையும், மேற்கு வங்கத்தையும் நினைவூட்டிக் கொண்டே தான் இருப்பார்கள்.**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற தி.மு.க.வேட்பாளர் மரு.கலை கதிரவன் சந்தித்து வெற்றி பெற்ற சான்றிதழை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், ஆலங்குளம் தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார் ஆதித்தன் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் சென்னை – அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் – விழுப்புரம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழக வேட்பாளர் டாக்டர் இலட்சுமணன், வானூர் தொகுதி கழக வேட்பாளர் கௌதம் திராவிட மணி ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., கழக செய்தித் தொடர்புக் குழுத் துணைத் தலைவர் மருது அழகுராஜ் ஆகியோர் உடனுள்ளார்கள்.

## ‘இலட்சியமும், கொள்கையும்தான் முக்கியம்’ என்று சூளுரைத்து

# நெருப்பாற்றில் நீந்தி மீண்டெழுவார், தி.மு.க. தலைவர்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

**சென்னை, மே 7– இலட்சியமும், கொள்கையும்தான் முக்கியம் என்று சூளுரைத்து நெருப்பாற்றில் நீந்தி மீண்டெழுபவர் தி.மு.க. தலைவர் மானமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான நடந்து முடிந்த தேர்தலின் முடிவுகள் வெளிவந்து விட்டன.

சாதனைகளைச் சரித்திரமாக நாளும் நிகழ்த்திக் காட்டியது தி.மு.க.

‘திராவிட மாடல்’ ஆட்சி. ஒன்றிய ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. கேள்விக் குறியாக்கிய தமிழ்நாட்டு உரிமைகளைக் காத்த, மீண்டும் பழைய வர்ண தர்மத்திற்கே வகை செய்யத் துடிக்கும் நிலைகளை எதிர்த்து ஓங்கிக் குரல் கொடுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது தலைமையில் நடத்தப்பட்டு திக்கெட்டும் பாராட்டப் பெற்ற ஆட்சி - எதிர்க்கட்சியாக அமர வைக்கப்பட்டிருக்கிறது. இது தமிழ்நாட்டு வாக்காளர்கள் தந்த அதிர்ச்சியான முடிவுகள் என்பது உண்மை.

நீண்ட அனுபவத்தினைப் பெற்று உழைப்பின் உருவமாகத் திகழுபவர் மானமிகு மு.க. ஸ்டாலின்!

நேர்மையும், நெஞ்சுரமும், அரசியலில் வெற்றி நீண்ட அனுபவத்தினைப் பெற்று உழைப்பின் உருவமாக இன்றும், நாளையும் உள்ள தி.மு.க.வின் தலைவர் மானமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள், இந்தத் தோல்வி கண்டு சிறிதும் சோர்வடைந்து சுருண்டு விடவில்லை.

இளைஞராக இருந்து பொதுவாழ்வில் ஈடுபட்ட காலம் முதலே நெருப்பாற்றில் நீந்தி மீண்டெழுபவர் அவர்!



தேர்தல் முடிவுகள் தமக்குச் சாதகமாக அமையவில்லை என்றாலும், முழுமையாக முடிவுகள் வெளிவரும் முன்பே மூலையில் முடங்கிப் போகாமல், அண்ணா அறிவாலயத்திற்கு நேற்று (4.5.2026) மாலையே வந்து, அந்தத் தோல்வியை வெற்றியாக்கும் மனத்திண்மையுடன் சுருக்கமும், உருக்கமுமான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

“பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்” (குறள் 580)

**இலட்சியமும், கொள்கையும் தான் முக்கியம்!**

என்பதற்கேற்ப, அவருக்கே உரித்தான ஒப்பற்ற பரிபக்குவமான அந்த அறிக்கை அவரது உணர்வுகளின் பண்பாடாக அமைந்துள்ளது.

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரித்து வாக்களித்த தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நான் எனது சக்தியை மீறி உழைத்தேன்!**

வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்க மறந்தவர்களுக்கும் சேர்த்தே ஆட்சி நடத்தினேன்.

எனது அரசியல் பொதுவாழ்வில் அதிகப்படியான வெற்றியையும் பார்த்துள்ளேன், தோல்விகளையும் சந்தித்துள்ளேன். எனவே, இலட்சியமும், கொள்கையும்தான் முக்கியமே தவிர, வெற்றி - தோல்விகள் மட்டுமல்ல என்று செயல்படக் கூடியவன் நான்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் பயணம் தொய்வில்லாமல் தொடரும்!

அதனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் பயணம் தொய்வில்லாமல் தொடரும்.

இதுவரை மக்களுக்காக சிறப்பான ஆளும் கட்சியாகச் செயல்பட்ட தி.மு.க. - இனி சிறப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படும்” என்று பிரகடனப் படுத்தியுள்ளார்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை

# 38 ஆக உயர்த்த ஒன்றிய அரசு முடிவு!

புதுடெல்லி, மே.7- இந்தியாவின் உச்சநீதி மன்றத்தில்தலைமைநீதிபதி உள்பட நீதிபதிகளின் எண்ணிக்கை யை 38 ஆக உயர்த்த ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. தற்போதுதலைமைநீதிபதி மற்றும் 33 நீதிபதிகள் உள்ளனர். அடுத்த பாராளுமன்ற கூட்டத் தொடரின்போதுமேலும்4 நீதிபதிகள் கூடுதலாக சேர்க்கப்படுவதற்கான மசோதா கொண்டு வரப்படும் என்று ஒன்றிய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் மசோதாநிறைவேற்றியபின் எண்ணிக்கை 38 ஆக உயரும். 1956ன் உச்சநீதி மன்றம் சட்டத்தின்படி தலைமை நீதிபதியை தவிர்த்துஅதிகபட்சமாக10 நீதிபதிகள் இருக்கலாம். 1960ல் திருத்தம் கொண்டு வரப்பட்டு அது 13 ஆக அதிகரிக்கப்பட்டது. பின்னர் 17 ஆக உயர்த்தப்பட்டது.

1986ல் திருத்தம் கொண்டு வரப்பட்டது 25 ஆக உயர்த்தப்பட்டது. 2009ல் புதிய திருத்தம் கொண்டுவரப்பட்டு30ஆக அதிகரிக்கப்பட்டது. கடைசியாக தலைமை நீதிபதியை தவிர்த்து 33 நீதிபதிகளாகஉயர்த்த2019ல் திருத்தம் கொண்டு வரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



கழக துணைச் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களை தென்காசி மாவட்டம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தென்காசி தொகுதியில் வெற்றி பெற்ற கழக வேட்பாளர் டாக்டர்.கலை கதிரவன் நேரில் சந்தித்து வெற்றி பெற்ற சான்றிதழை காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை,தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், முன்னாள் மாவட்டச் செயலாளர் பொ.சிவபத்மநாதன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீ குமார், நகர செயலாளர் சாதிர், முன்னாள் ஒன்றிய செயலாளர் காசிதர்மம் துரை உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.